# கொங்கணவ சித்தர் - கொங்கணவரின் வாலைக் கும்மி துதி

சித்தாந்த ரத்தினம் எஸ் வி ஆர் மூர்த்தி
பெங்களூர்
Email: Moorthy.hospet@gmai.com
bv.vijaya.moorthy@gmail.com

53

**கட்டுரையின் நோக்கம்**

சித்தம் /சித்தர் பற்றிய எனது கருத்துக்களைத் தொகுத்து வழங்குதல் மற்றும் குறிப்பாகக் **கொங்கணவ சித்தர்** பற்றியத் தகவல்களுடன் சித்தரின் " **வாலைக் கும்மி** பாடல்களைப் பற்றிய ஆய்வுகளுடன் பகிர்ந்து கொள்கிறேன். **செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற சித்தர் பிறந்த தமிழ்நாடு** எனச் சித்தர்களின் பெருமையைப் பாராட்டுகின்றார் மகாகவி பாரதியார். சித்தம் போக்கு சிவன் போக்கு என்பது உலக வழக்கு நிலையற்ற புத்தி உள்ளவர்கள் கண சித்தம் கண பித்தம் என்பார்கள்.

சித்தர் களேபோற்றி வாலைப் பெண்ணாமந்த
சக்தியின்மேற் கும்மிபாட்டுறைக்க
தத்திமித் தோமென ஆடும் சரஸ்வதி
பத்தினி பொற்பாதம் காப்போமே!
கல்விநிறை வாலைப்பெண் காதலியென் றோதுகின்ற
செல்வியின்மேற் கும்மிதன்னை செப்புதற்கு - நல் விஜய

நாதனிருசொல் வேதனஞ்சு போதனை மிஞ்சும்
ஆனகஞ்ச பாதம் வஞ்சநெஞ் சினில் வைப்போம்!
சக்தி சடாதரி வாலைப்பெண் ணாமந்த
உத்தமிமேற் கும்மிபாட் டுரைக்க

வித்தைகள் ஒற்றைக்கொம் பாவலை
சித்தி விநாயகன் காப்போமே!

…………………………………
நித்தம் நித்தம் மாறுகின்றது எத்தனையோ?
நெஞ்சில் நினைத்ததிலே நடந்தது தான் எத்தனையோ?
கோடு போட்டு வாழ்ந்தவர்கள்

எத்தனையோ? கொண்ட குறியும் தவறி போனவர்கள் எத்தனையோ ?
நித்தம், நித்தம் மாறுகின்றது எத்தனையோ?

திரைக்கவிஞர் *சு மாயவ நாதன்* ( படம் : பந்த பாசம் 1962)
இக்கருத்தை நிலைத்த புத்தியுடன் நெறி பிறழாமல் அடங்கிய நிலையை அடக்கமுடைமை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவது .

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**

**மலையிலும் மாணப் பெரிது (குறள் -124)**

சித்தம் கலங்கினால் பித்தம் என்பர் பித்தம் தெளிந்தால் புத்தி தெளிவடையும் .சித்தம் தெளிவடையாது பித்தம் மிகுந்தவர்கள் பித்தர்கள்

**மனம் ஒரு குரங்கு அங்கும் இங்கும் அலைபாயும் ;**

அலைபாயும் மனத்தை அடக்கி ஒரு நிலை நிறுத்துபவர்கள் **சித்தர்கள் .**

சித்தர்கள் புத்தி மூலமாக புத்திவான்களாகி புத்தர்கள் ஆகிறார்கள் புத்தர்கள் ஞானவான்கள் இறையடி சேரும் முக்தி புத்தியால் சித்திக்கும்.

சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் புத்தியைக் கட்டுப்படுத்துபவர்கள். ஆன்மிகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும், சித்தர்கள் முக்கியப் பங்காற்றியவர்கள். அவர்கள் தத்துவ நெறியிலும், மருத்துவத் துறையிலும் மிகுதியான பல நூல்களைச் செய்துள்ளனர். இவர்கள் கடவுள் நிலை பெற்றவர்கள். கடவுளுக்குச் சமமாய்ப் போற்றி வணங்கப்பட்டனர்.

இதற்கு- உதாரண புருஷராக வாழ்ந்து சித்தி அடைந்தவர் **வள்ளலார்** ஆவார்கள் .

வள்ளற் பெருமான் இராமலிங்க சுவாமிகள் சித்தி வளாகம் சித்தி வளாகத் திருமாளிகை , மேட்டுக்குப்பம் 1870 வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில் வள்ளற்பெருமானார் தங்கியிருந்த திருமாளிகைக்கு சித்தி வளாகம் என்று நிறங்கள் கொண்ட பெயர்.

வள்ளலார் திருக்கரத்தால் ஏற்றிய சத்திய ஞான ஜோதி 155 ஆண்டுகளுக்கும் மேலாக வழிபாட்டில் உள்ளது. வள்ளற்பெருமானாருக்கு முன்னர் தோன்றிய அருளாளர்கள் கடவுளை தேடி இரண்டற கலந்தார்கள்.
இறைவனே வள்ளற்பெருமானாரைத் தேடி வந்து அருட்பெருஞ்ஜோதி இறவா பெருநிலையை அருளினார்கள்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**அறிவு -சிற்றறிவி- பேரறிவு**

**மனிதனுக்குள்ள அறிவு வளரும் அறிவு ; சிற்றறிவு .**

**பேரறிவு என்பது கடவுளாக்கானது . மெய்யறிவு .**
**வாலறிவன்**

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடலில் குறிப்பிடுகிறார் .

**கற்றதனால் ஆயபயனென் கொல்வாலறிவன்**

**நற்றாள் தொழாஅர் எனின் ( குறள் 002)**

**அறிவு**

அறிவு என்பது ஒரு சிற்றாறு. அது மேட்டிலும் பள்ளத்திலும் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருக்கிறது. போகிற இடங்களில் உள்ள மலங்களை வாரிக் கொள்கிறது.ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லும் குப்பை கூளங்கள் போல் உயிர்களிடம்

**மூன்று மலங்கள்( ஆணவம் கன்மம் மாயை)** இருக்கின்றன.

உயிர்கள் உடலை விட்டு இறக்கும் வரை கன்மமும் மாயையும் ஒட்டி வரும் .உயிர் பிரியும் போது ஆணவ மலம் வெடி அறுத்தெறிப்படும் என்பதை இறந்தவர்கள் தலைப்பக்கம் விளக்கு ஒன்று ஏற்றப்பட்டு தேங்காய் ஒன்று உடைத்து வைக்கப்படுகிறது.ஆன்மா மலத்தைச் சார்ந்திருப் பதனால்தான் பிறவி வருகிறது. மனிதப் பிறவியில் உடம்பிலும், உடையிலும் ஒட்டிக்கொள்கிற அழுக்குப்போல உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் அழுக்கு எதுவோ அது உயிரைச் சார்ந்திருக் கிறது.

**மனம் இருள் மாயையான மாயையிலிருந்து விடுபட்டவுடனே மனத்தைப் பற்றிய மலமுமும் மறைந்து போகும் ; மலம் என்பது விட்டுப் போகும் வரை மட்டும் மனம் இருக்கும்** என்று சொல்லலாம்.

மனம் இருப்பதனால்தான் மனிதன் ஆகிறான்;

அவன் எல்லாக் காரியங்களையும் செய்கிறான்.

அந்தக்கரணம் மனத்தின் கொழுந்து எதுவோ அதைப் புத்தி என்றும் சொல்வார்கள்.

**சித்தர்கள்** என்போர் **இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம்,சமாதி** முதலிய **எட்டு** வகையான யோகாங்கம் முலம் எண் **பெருஞ்** சித்திகளைப் பெற்றவர்கள் ஆவர்.

**"சித்தர்"** என்ற சொல்லுக்கு **சித்தி** பெற்றவர் என்பது பொருள்.

சித்தர்கள் பாடல்களின் கருத்துகள் , **நாடு, மொழி, இனம்** ஆகிய எல்லைகளைக் கடந்து சென்று

உலகமெங்கும் பரவும் ஆற்றல் உடையவை. உலகப் பழக்க வழக்கங்கள், சாதி சமயப் பிரிவுகள், செல்வம், செல்வாக்கு, மாயையினால் துய்க்கப் பெறும் உலக இன்பங்கள், பட்டம், பதவி, புகழ் முதலியவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள் சித்தர்கள்.

உலக மக்கள் அனைவர்க்கும் **பொதுவானவர்கள்**. அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுபவர்கள். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை - **எம்மதமும் சம்மதம்** என்ற சமரச சன்மார்க்கத்தை - வளர்ப்பவர்கள்.

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்** என்பதே **குறிக்கோள்.**

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்பதே **சமயக் கோட்பாடு**.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கக் கூடியவர்கள்.

இத்தகைய சிறப்புக்குரியவர்கள் உலகமெங்கும் உள்ளனர்.

எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கக் கூடியவர்கள் ஆவர்.

சித்தர்கள் பலர் தம் இயற் பெயரை இழந்து, வாழ்ந்த இடத்தின் பெயரால் (**பட்டினத்தார், கொங்கணர், இடைக்காடர், கருவூரார் என்ற** வகையில்) அழைக்கப்பட்டனர். பாடிய பாடல் வகை, சொல்லாட்சி முதலியவற்றால் சிறப்புப் பெயரையும் (அகப்பேய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகணிச் சித்தர் என்பது போல்) பெற்றுள்ளனர்.

**சித்தர்களின் காலம்**

தமிழகத்தில் சித்தர் பலர், பல நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வாழ்ந்திருந்தாலும், முதலில் அகத்தியர் பின் **கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர்**. இவரே தமிழ்ச் சித்தர் பரம்பரையின் தலைவராக விளங்குகின்றார். அவருக்குப்பின் காலந்தோறும் சித்தர்கள் பலர் ஆங்காங்கே தோன்றிப் பாடல்கள் பல இயற்றியுள்ளனர்.

**பதினெண் சித்தர்கள்**

பதினெண் சித்தர்கள் என்று கூறுவது பழமையான வழக்காகும். ஆனால் இதில் ஒரு சிக்கல் உள்ளது. பதினெட்டு என்னும் எண்ணிக்கையோடு சித்தர் பட்டியல்கள் பல உள்ளன.

இதில் எது சரியானது என்று தீர்மானிக்க முடியவில்லை. எடுத்துக்காட்டாக, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Lexicon) தரும் பட்டியல்

**“திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுந்தரானந்த தேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர்** என்ற பதினெட்டுச் சித்தர்கள், பதினெட்டுச் சித்த புருஷர்கள்.” **நவநாத சித்தர்கள்** என்று மற்றொரு குழுவினரும் உண்டு. காலப்போக்கில் மேலும் பலர்

சேர்க்கப்பட்டு, இன்று எண்ணிலடங்காச் சித்தர்கள் உள்ளனர். சான்றாகச் சிவவாக்கியர், வாலைச்சாமி, பட்டினத்தார், இராமலிங்க அடிகள், மச்சமுனி முதலான பலர். இங்கு, பெருவழக்கில் உள்ள பதினெண் சித்தர்களைப் பற்றிக் காணலாம்.

**பதினெண் சித்தர்கள் :**

நந்தீசர்
அகத்தியர்
திருமூலர்
புண்ணாக்கீசர்
புலத்தியர்
பூனைக்கண்ணர்
போகர்
கருவூரார்
**கொங்கணவர்**
காலாங்கி நாதர்
பாம்பாட்டிச் சித்தர்
தேரையர்
குதம்பைச் சித்தர்
இடைக்காடர்
சட்டை முனி
அழுகண் சித்தர் (அழுகுணிச் சித்தர் என்றும் குறிப்பிடுவர்.)
அகப்பேய்ச் சித்தர்
தன்வந்திரி

**ஜோதிடவியலில் சித்தம்**

இந்திய ஜோதிடத்தில் **சித்தம்** என்பது, பஞ்சாங்க உறுப்புக்களுள் ஒன்றான யோகம் என்பதனுள் அடங்கும் 27 யோகங்களுள் இருபத்தோராவது ஆகும். இராசிச் சக்கரத்தின் (360 புள்ளி) தொடக்கப் புள்ளியில் இருந்து 266° 40' தொடக்கம் 280° 00' வரை "**சித்தம்**" யோகத்துக்கு உரியது. சூரியன், சந்திரன் ஆகிய கோள்களின் இருப்பிடங்களின் கூட்டுத்தொகை இந்தக் கோணத்தினூடாக அதிகரிப்பதற்கு எடுக்கும் நேரத்துக்குரிய யோகம் "**சித்தம்**" ஆகும். இந்த நேரத்தில் பிறக்கும் ஒருவர் "**சித்தம்**" யோகத்தைத் தனது பிறந்த யோகமாகக் கொண்டிருப்பார்.

சமஸ்கிருத மொழியில் *சித்த (Siddha)* என்பது *நிறைவானது.* என்னும் பொருள் அமைந்தது. மங்கலமானது எனச் ஜோதிட நூல்கள் குறிப்பிடும் யோகங்களுள் இதுவும் ஒன்று.

இதன் ஆட்சிக் கோள் **கேது** /ஆட்சித் தேவதை **கார்த்திகேயன்**

**கொங்கணச்சித்தர்**

பதினென் சித்தர்களில் **கொங்கணவர்** பற்றிய கட்டுரையே எனது ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பொருண்மை

**கொங்கணச் சித்தர் இலக்கியம்**

எழில் கொஞ்சும் கேரளத்தின் கொங்கண் பிரதேசத்தில் புளிஞர் குடியில் கொங்கணச் சித்தர் பிறந்தார் என்று அகத்தியர் பனிரெண்டாயிரமும் போகர் ஏழாயிரமும் தெரிவிக்கின்றன. கொங்கணரின் குரு போகர் ஆவார். கொங்கணர் சிறந்த முருகன் மற்றும் அம்பிகை பக்தர் ஆவார். முருகனை வழிபடும் முறையையும் மந்திரங்களையும் போகர் கொங்கணருக்கு உபதேசித்துள்ளார்.

**கொங்கணவா நான் ஒன்றும் கொக்கல்ல எரிந்து போவதற்கு'**

இவர் தவத்தில் ஆழ்ந்திருக்கும்போது, மரக்கிளையில் இருந்த கொக்கு எச்சமிட, அதனால் தவம் கலைந்து, கோபமுடன் சித்தர் நோக்க, கொக்கு எரிந்து சாம்பலானது . பிறகு, நீண்டநாள் தவத்திலிருந்து கலைந்தமையால் ஆகாரம் உண்ண ஒரு வீட்டிற்குச் சென்று உணவு கேட்டார். அவ்வீட்டிலிருந்த அம்மையார் காலந் தாழ்த்திஅன்னமளித்தார். சித்தர், அந்த அம்மையாரை, சினந்து நோக்கினார். உடனே, அம்மையார்,

'**கொங்கணவா நான் ஒன்றும் கொக்கல்ல எரிந்து போவதற்கு'** என்று அமைதியாகப் பதில் அளித்தார்.

**'என் கணவருக்கான பணிவிடையில் இருந்த போது உமது குரல் கேட்டது. ஆனால் எனது கடமையை முடிக்காமல் நான் எப்படி உமக்கு அன்னமளிக்க வரமுடியும்'** என்றார் அவர். கொங்கணவர், அந்த பெண்மணியின் தொலைவில் உணர்தலை (ஞானதிருஷ்டி) எண்ணி வியந்தார். அவளுடைய கற்பின் திண்மையை மெச்சி வாழ்த்தினார். தம்முடைய சினத்தை நினைத்து வெட்கினார். தன்னுடைய சினத்தை வெல்லவேண்டிய உண்மையை அறிந்து மிகவும் தீவிரமாகத் தவவாழ்வில் கவனம் செலுத்தலானார். முருகப்பெருமான் பழனியம்பதியில் ஆண்டி கோலத்தில் நின்று தரிசனம் தருகிறார். முருகப்பெருமான் பழனியை விட்டுத் திருவிளையாடல் புரியும் பொருட்டு **அளவாய் மலை** சென்று அங்கு சித்தர்கள் சேர்த்து வைத்த பொன் மலையை தூக்கி வந்து **வைகை பொன்மலை** என்ற இடத்தில் வைத்ததாக அதன் தல வரலாறு கூறுகிறது

முருகன் பழனியை விட்டு இடம் பெயர்ந்ததை ஞான திருஷ்டியால் அறிந்த **போகர்** புதிய மூலவராக நவ பாஷாணத்தால் ஆன தண்டாயுதபாணியை வடித்தெடுத்தார். தனது சீடரான கொங்கணரை அழைத்து அளவாய் மலை சென்று முருகனின் திருவிளையாடலை நேரில் சென்று அறிந்து வரப்பணித்தார். அதை ஏற்று கொங்கணரும் பழனியில் இருந்து அளவாய் மலை வந்து

நடந்ததை அறிந்து கொண்டு சிறிது காலம் தவம் புரிந்தார். பிறகு அங்கிருந்து வைகை பொன்மலை என்ற தலத்தை அடைந்து அங்குள்ள குகையில் சுமார் 300 வருடங்கள் தவம் புரிந்து முருகன் தரிசனம் கண்டதாக குறிப்புகள் கூறுகின்றன.

அங்கிருந்து **ஊதியூர்** மற்றும் **பழனி** வந்து போகரை கண்டு அளவளாவி இருந்தார். மறுபடியும் பயணம் மேற்கொண்ட அவர் இறுதியில்

**திருப்பதி திருமலையில் சித்திரை மாதம்**

**உத்திராடம்** நட்சத்திரத்தில் **ஜீவசமாதி** அடைந்தார்[

**கொங்கணர் சித்தர் ஜீவ சமாதி**

18 சித்தர்களில் ஒருவரான கொங்கணர் சித்தர் திருப்பதி திருமலையில் கோயில் குளத்தின் **தெற்குப் பகுதியில், எட்டாம் படிக்கட்டில் அடக்கமாகி** இருப்பதாகவும், எட்டாவது மலையில் பெருமாள் பாபாஜி என்ற பக்தருடன் சொக்கட்டான் ஆடிய இடத்தில் அடக்கமாகி இருப்பதாகவும் கூறுவர். இங்கு செல்பவர்கள் அவரது **ஜீவ சமாதிக்கு** மேல் உள்ள மரத்தின் இலையை வைத்து வழிபாடு செய்வது சிறப்பு. இந்த இடத்திற்கு செல்ல திருமலையில் இருந்து வாகன வசதி உண்டு.

**திருப்பூர்** மாவட்டம் **ஊதியூர்** மலையில் கொங்கண சித்தர் தவபீடம் உள்ளது. இது தமிழ்நாட்டின் புகழ்பெற்ற புனித தலங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டிலுள்ள பல தலங்களிலும் சென்று தவம் செய்த.**கொங்கணர் –800 வருடம் 16 நாள் வாழ்ந்தார்.**

**இறுதியில் திருப்பதியில் ஜீவசமாதியானார்.** என்பாருமுண்டு.

இவர் தங்கியிருந்த மற்ற இடங்களில் முக்கியமானவை **வையப்பமலை, அலவாய்மலை, சங்ககிரி** ஆகியவையாகும் இவருக்குக்

**கொங்கணர், கொங்கணச் சித்தர், கொங்கண நாயனார்,**

**கொங்கண நாதர்** எனப் பல பெயர்களும் உண்டு.

இவர்கள் வெவ்வேறானவர்கள் என்பாருமுண்டு.

கொங்கணர் திருவள்ளுவரின் சீடர் என்றும் போகரின் சீடர் என்றும் கூறுகின்றனர். இவர் பெயரால் வைத்திய, இரசவாத, யோக நூல்களும் பாடல்களும் இருக்கின்றன. இவர் கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர். ஆதலின் இப்பெயர் பெற்றார் என்பர்.

**அரச வம்சம்**

கொங்கனர் அடிப்படையில் ஒரு இளவரசர் கொங்குநாட்டில் மகராஜன் எனும் மன்னனின் ஒரே மகனாவார். தனது 16ஆவது வயதிலேயே காடுகளை வலம் வரவேண்டும் என்ற ஆசையை தனது தந்தையிடம் முறையிட அவரும் ஏற்பாடு செய்தார். அந்தப் பயணத்திற்கு பெயர் **பூவலம்** என்று

குறிப்பிடுவர்.

- மலை சார்ந்த காடுகளைச் சுற்றி வந்த இளவரசர், தனது கண்களில் படும் பறவை விலங்கு செடி கொடிகள் அனைத்தையும் தனது வாளினால் வெட்டி வீசி எறிந்து கொண்டே வந்து சேர்ந்த மலைதான் **ஊதியர்** மலை.

**கொங்கணர் நூல்கள்** கொங்கணர் நூல்கள் பல உள்ளன.

அவற்றுள் சில நூல்களே அறியப்பட்டுள்ளன.

- தனிக்குணம் 200
- வாத சூத்திரம் 200
- வாத காவியம் 3000
- வைத்தியம் 200
- சரக்கு வைப்பு 200
- முக்காண்டங்கள் 1500
- தண்டகம் 120
- ஞான வெண்பா 49
- ஞான முக்காண்ட சூத்திரம் 80
- கற்ப சூத்திரம் 100
- உற்பக்தி ஞானம் 21
- முதற்காண்ட சூத்திரம் 50
- **வாலைக்கும்மி 100**
- ஆதியந்த சூத்திரம் 45
- நடுக்காண்ட சூத்திரம் 50
- முப்பு சூத்திரம் 40
- ஞான சைதண்யம்109
- கடைக்காண்ட சூத்திரம் 50
- கொங்கணர் கற்ப உற்பத்தி
- கொங்கணர் நடு காண்ட சூத்திரம்-50
- கொங்கணர் சூத்திரம்-15
- கொங்கணர் சூத்திரம்-50
- கொங்கணர் 2,3 காண்டம்

- கொங்கணர் ஆதி சூத்திரம்
- கொங்கணர் பிரம்மானந்தம்
- கொங்கணர் ஞான நூல்
- கொங்கணர் ஞானம்
- கொங்கணர் கடை காண்டம்
- கொங்கணர் கடை காண்டம்- 2
- கொங்கணர் கடை காண்டம்-40
- கொங்கனார் கடைக் காண்ட சூத்திரம்
- கொங்கணர் கலைக்கியான சூத்திரம்
- கொங்கணர் கற்ப கோள்
- கொங்கணர் கற்ப முறைகள்
- கொங்கணர் கற்ப சூத்திரம்
- கொங்கணர் கற்ப உற்பத்தி
- கொங்கணர் கற்பம்
- கொங்கணர் மூன்றாம் காண்டம்
- கொங்கணர் முக்காண்டம்
- கொங்கணர் முப்பு சுருக்கம்
- கொங்கணர் முதல் காண்டம்-500
- கொங்கணர் 1-ஆம் காண்டம்-40
- கொங்கணர் 1-ஆம் காண்டம்-41
- கொங்கணர் நடு காண்டம்
- கொங்கணர் பட்சணி
- கொங்கணர் பிற காண்டம்
- கொங்கணர் சரக்கு வைப்பு
- கொங்கணர் சரக்கு வைப்பு முறை
- கொங்கணர் செந்தூரம்
- கொங்கணர் சித்தர் நூல்
- கொங்கணர் சித்து – 12
- கொங்கணர் சூத்திரம்
- கொங்கணர் சூத்திரம் 27-இல் இருந்து
- கொங்கணர் சூத்திரம்-40
- கொங்கணர் முதல் காண்டம்-41
- கொங்கணர் சூத்திரம்-15
- கொங்கணர் சூத்திரம்-27

- கொங்கணர் சூத்திரம்-40
- கொங்கணர் சூத்திரம்-50
- கொங்கணர் சூத்திரம்-500
- கொங்கணர் சூத்திரம்-60
- கொங்கணர் தாண்டகம் சுருக்கம்
- கொங்கணர் துரிய ஞானம்-15
- கொங்கணர் உற்பத்தி லயம்-21
- கொங்கணர் வாக்கியம் முதல் காண்டம்
- கொங்கணர் -16
- கொங்கணர் -30
- கொங்கணர் பாடல்கள்
- கொங்கணர் வேதாந்த சூத்திரம்
- கொங்கணர் வைத்திய நூல்

போகரின் கருத்துப்படி திருமாளிகைத் தேவரிடம் சென்று சமய தீட்சை, நிர்வாண தீட்சை பெற்றார் என்ற குறிப்பு போகர் ஏழாயிரத்தில் காணப்படுகிறது. இவர் **திருவேங்கடத்தில் (திருப்பதியில்)** யோக சமாதியில் அமர்ந்தார் என்பர். கொங்கணவர் வாத காவியம் பல வேதியியல் ரகசியங்களைப் பெற்றுள்ளது. கொங்கணவர் ஏறக்குறைய 70 நூல்கள் இயற்றியுள்ளார்.

இதில் **வாலைக் கும்மியைப்** பற்றி கருத்துக்களை இங்கு பதிவிடுகிறேன்

**கொங்கணச் சித்தர் வாலைக் கும்மி**

இவர் பெயரில் வழங்கப்படும் பாடல்களில் "**வாலைக் கும்மி**" என்பது ஒன்று. **வாலை** என்பது சக்தியின் பெயர். கன்னி என்றும் பொருள். கன்னிப் பெண்ணை முன்நிறுத்தி கும்மி பாடியுள்ளதால் **வாலைக்கும்மி** என வழங்குகிறது.

இது இவர் பெயரால் வழங்கினாலும் இவரால் பாடப்பட்டது அன்று. இவர் கருத்துக்களை அமைத்து ஆசிரியர் **வீரப் பெருமாளின் மாணாக்கர்** ஒருவர் பாடியதாகவும், அவர் வலவேந்திரன் துரைவள்ளல் என்ற சிற்றரசன் காலத்தவர் என்றும் அவன்அஞ்செழுத்துணர்ந்த சைவன் என்றம் **வாலைக்கும்மி** பாடல் கூறுகின்றது.

**கும்மி**

செய்கை ( சைகை) மொழியும் ஒலி வடிவமும் இணைந்து எழுந்து எழுத்து வடிவத்திற்கு மாறியது எழுத்து வடிவத்தில் இதனைக் கல்லிலும் ( கல்வெட்டுக்கள் ) ஓலையிலும் ( ஓலைச் சுவடிகள் ) பதிப்பித்து வந்தனர்.

ஓலைச்சுவடிகளில் பதிப்பித்த இந்த பாடல்களை முதலில் கைகளைக் கொட்டி ஆடுவதனைக் **கும்மி** என்கிறோம் .கும்மாளம் என்ற சொல்லில் இருந்து வரும் குதித்தாடுதல் / கும்மாளமிடுதல் என்பதே **கும்மி** எனப்படுகிறது .**அகநானுறு** கும்மியை " **கொப்பி** " என்றும் ; **சீவக சிந்தாமணியில் " கொம்மை** என்றும் வழங்கப்படுகிறது . மற்றும் கொம்மாய் , கொம்மி, நன்னாகொட்டுதல் , தட்டியாங் கொட்டுதல் , கொண்டான் கொட்டுதல் என பல பெயர்கள் **கும்மிக்கு** வழங்கப்படுகிறது. வாலைக் கும்மி யின் **முதல்** பாடல் **சரஸ்வதி** துதியுடன் தொடங்குகிறது சித்தர்களே போற்றி வாலைபெண் ணாமந்த. சக்தியின் மேற் கும்மி பாட்டுறைக்க தத்திமித் தோமென.ஆடும் **சரஸ்வதி** பத்தினி பொற்பாதம் **காப்போமே! இறுதியாக 115** பாடல்

- **வட மலை** என்று சொல்லி எல்லோரையும் வையகத்தில் மாந்தர் போவார்கள் வடமலையில் வாழும் வெங்கடேசனுக்கு வளர்ந்து நிற்கிறான் **கும்மியடி** .
- என்று நிறைவு செய்கிறார் .

பாடலில் சொல்லப்படும் கருத்துக்களைப் பார்ப்போம்

**நிலையாமை**

உறுதியற்ற வாழ்வினை தெரிவிக்கும் பாடல் (23)

**ஊத்தைச் சடிலமென்று எண்ணாதே இது உப்பிட்ட பாண்ட் மென் றெண்ணாதே** பாடல் (23 ) என்கிறார் .

**ஒன்பது வாசல் கோட்டையுண்டு அதில் உள்ளே நிலைக்காரர் அஞ்சு பேராம்** பாடல் (37) என்கிறார் .

**யுக்தகாலன் வந்து தான் பிடித்தால் நாமும் செத்தசவமடி வாலைப் பெண்ணே** என்கிறார்.

பெண்ணை முன்னிறுத்தும் பாடல் (64)

**மாதா வாய் வந்து அமுதம் தந்தாள் மனையாட்டி யாய் வந்து சுகங் கொடுத்தாள் ஆதரவாகிய தங்கையானாள் நமக்கு ஆசைக் கொழுந்தியும் மாமியானாள்**

மேலும்

**பெண்ணுமில் லாமலே ஆணுமில்லை இது பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!**

என்கிறார் .மற்றும் ஆணுக்கு பெண்ணே அடிப்படை ஆதாரம் என்பதனை பாடல் (79)

**கொண்டாட்டமான தகப்பன் பொய்யே முலை கொடுத்த தாயும் நிசமே!**

என்கிறார் .

**கற்புள மாதர் தம்மை போற்றுதல் (** பாடல் -45)

**கற்புள்ள மாதர் குலம் வாழ்க! நிறை கற்பை பழித்தவரே தாழ்க !**

என்கிறார்

**தான தருமம்** செய்தல் தலையாய கடமை ( பாடல் 61)

**பெண்டாட்டி மந்தை மட்டும் வருவாள் பெற்ற பிள்ளை மயாவிக் கனா மட்டும் தெண்டாட் டு தருமம் நடுவிலே வந்து பரகதிதான் கொடுக்கும ப்பா !**

**விரும்பிய தருமப் பணியை** விரைந்து செய்ய வேண்டும்

**சீக்கிரம் தருமம் செய்ய வேண்டும் திருப்பணிகள் முடிக்க வேண்டும் (** பாடல் -82)

**நாளை என்று சொல்லாதே என்று நான்மறை வேதம் முழங்குதடி** (பாடல் -85)



Karuvoorar

**நிறைவுரை**

சித்தர் பாடல்கள் பெரும்பாலானவை" **வாலைப் பெண்ணே"** மற்றும்"**கும்மியடிங்கடி ".** என்ற சொற்களால் முடித்திருக்கிறார். மற்றும் முதற் பாடல் வெள்ளைக் கலையுடுத்திய கலைமகள் **சரஸ்வதி துதி-** போற்றும் பாடலுடன் தொடங்கியதால் கொங்கணச் சித்தரைப்

பெண்ணைப் போற்றும் **பெரும் புலவர் முதல் புலவர்** எனலாம்.சித்தர் பாடலென்றாலும் இல்லறத்தார் மேன்மைக்காகவும் இல்லறத்து நல்லாள் பெண்மையைப் பாராட்டிப் பாடியிருப்பது

**மகாகவி பாரதியாருக்கும்**

முன்னோடியாக இருந்துள்ளார் என அறிய முடிகிறது.மகாகவி பாரதியார் ஞானியரும் யோகியரும் சித்தர்களும் வாழும் காலத்தில் அறியப் படுவதில்லை, வாழும் காலமெல்லாம் ஒரு பைத்தியக்காரனைப் போலவே அவர்களை அடித்தும் விரட்டியும் துன்புறுத்தும் சமூகம். அவர்கள் காலத்துக்குப் பின்பே அவர்களை நினைத்து கண்ணீர் விடும.அந்த சாபத்துக்கு ஞானியரும் சித்தர்களும் தப்பமுடியாது, அந்த வரிசையில் வந்தவன் *எட்டயபுரத்து சித்தன்* *மகாகவிபாரதி*

" *எனக்கு முன்னே* *சித்தர்பலர்* *இருந்தாரப்பா!*

*யானும் வந்தேன்* *ஒருசித்தன்* *இந்தநாட்டில்* " என அவன் தன்னை அழுத்தமாக சொல்லிக் கொள்கிறான் .

**மேற் கோள் நூல்கள்**

சித்தர் உலக இலக்கியத்திற்கானக் கட்டுரை " **கொங்கணச் சித்தர்** " University of Madras Lexicon

1. சித்தி/கைகூடுகை.

வெந்திறற் சித்திகண்ட வீடணன் (**கம்பரா. அதிகாய. 208).**

2. அஷ்டமாசித்தி சித்தியெட்டும் (**திருவிளை.அட்டமாசித்தி**. 21).

3.மோட்சம் நற்றவர்க்குச் சித்தி நல்க வல்லாற்கு (**திருநூற்**. 46).

4. யோகமிருபத்தேழனுள் ஒன்று (விதான.பஞ்சாங்க. 24.)

5. சிவஞானசித்தியார் சித்தியிலே யோர்விருத்தப்பாதி போதும் (திராவிடப். 338).

சைவத் திருமுறைகள் /பாரதியார் /மாயவநாதன் பாடல்கள் .

**மேலும் கட்டுரைக்கு உதவிய நூல் :**

- சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் **வீ அரசு அவர்களின்** வழிகாட்டுதலின்படி ஆய்வின் பட்டயப் பேற்றிற்காக
- **இர. குமரவேல் அவர்கள்** எழுதி/ பதிப்பித்த **"வாலைக் கும்மி"** ஆய்வுப் பதிவேடு பதிப்பித்த நாள் : **31.07.2007**